


www.penakural.com
RNI No.: TNTAM / 2022 / 85375

# பேனா குரல்
# PENA KURAL

தமிழ் மாத இதழ்

Publisher: N V SIVASHANKAR
Editor: RATHIKA.S

மலர்: 04 | இதழ்: 04 | ஏப்ரல் 2026 | Volume: 04 | Issue: 04 | April 2026 | ₹ 10/-





## மேற்காசியப் போர் சவால்களை எதிர்கொள்ள இந்தியர்கள் ஒன்றிணைய வேண்டும்

## நரேந்திர மோடி வேண்டுகோள்

மேற்காசியாவில் நடைபெற்று வரும் போரினால் உருவாகும் சவால்களை எதிர்கொள்ள இந்தியர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதமர் நரேந்திர மோடி, 'மன் கி பாத்' என்ற வானொலி நிகழ்ச்சியின் மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றி வருகிறார். அந்த வகையில், 132-வது முறையாக மார்ச் 29 அன்று 'மன் கி பாத்' நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

அப்போது பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்ததாவது, "ஐசிசி டி20 உலகக்கோப்பைக் கிரிக்கெட் தொடரில் இந்திய ஆடவர் அணி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற்றது. கடந்த மாதம் கிரிக்கெட் ஆர்வலர்களுக்கு உற்சாகம் நிறைந்ததாக இருந்தது. இந்த வெற்றி நாட்டு மக்களைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. அதேபோல், கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக




ரஞ்சிக்கோப்பையை ஜம்மு-காஷ்மீர் கிரிக்கெட் அணி வென்றதன் மூலம் உள்நாட்டு கிரிக்கெட்டில் முக்கிய மைல்கல் சாதனையைப் பதிவுச் செய்துள்ளது. கிரிக்கெட் வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியின் பலனே இந்த சாதனைக்கு காரணம்" என்றார்.

ஜம்மு-காஷ்மீர் கிரிக்கெட் அணியின் கேப்டன் பராஸ் டோக்ராவின் (Paras Dogra) பங்களிப்பு மற்றும் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆகிப் நபியின் (Auqib Nabi) சிறப்பான ஆட்டத்தைப் பாராட்டிய பிரதமர் நரேந்திர மோடி, அவுகிப்பின் 60 விக்கெட் சாதனையை எடுத்துரைத்தார். அத்துடன், ஜம்மு-காஷ்மீர் அணியின் வெற்றிக்கு இளம் வேகப்பந்து வீச்சாளர் ஆகிப் நபி உதவியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் பேசிய அவர் "இந்த வரலாற்று சாதனை கிரிக்கெட் வீரர்கள், பயிற்சியாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீர் மக்களிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சாதனை ஜம்மு-காஷ்மீரில் உள்ள இளைஞர்களிடையே விளையாட்டு மீதான ஆர்வத்தை மேலும் தூண்டும். அண்மையில் குல்மார்க்கில் நடைபெற்ற கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பிற விளையாட்டுப் போட்டிகளுக்கான மையமாக ஜம்மு-காஷ்மீர் உருவாகி வருகிறது. ஜம்மு-காஷ்மீர் விளையாட்டு வீரர்களின் வெற்றி தொடரும்; இதன்மூலம் இப்பகுதி முழுவதும் உள்ள இளைஞர்களின் திறமைகளை ஊக்குவிக்கும்" என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "மேற்காசியாவில் நடைபெற்று வரும் போரினால் உருவாகும் சவால்களை எதிர்கொள்ள நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று 140 கோடி இந்திய மக்களை நான் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்; வதந்திகளுக்கு இரையாகிவிடக்கூடாது. மேற்காசியாவில் வசிக்கும் இந்தியர்கள், பணிபுரிபவர்கள் என சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வரும் வளைகுடா நாடுகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

## வாஜ்பாயுடன் கூட்டணி மட்டுமே வைத்தோம்! கட்சி அடகு இல்லை! ஈபிஎஸ்க்கு ஸ்டாலின் பதிலடி!



சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு திருச்சி கிழக்கு தொகுதிக்குட்டப்பட்ட காந்தி மார்க்கெட், பாலக்கரை உள்ளிட்ட பகுதிகளில் நடந்து சென்று வாக்கு சேகரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

பாஜகவுடன் திமுகவும் கூட்டணி வைத்திருந்ததாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்த நிலையில், பாஜகவுடன் கூட்டணி வைத்தோமே தவிர, கட்சியை அடகு வைக்கவில்லை என முதலமைச்சர் ஸ்டாலின் பதிலடி கொடுத்துள்ளார்.

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு திருச்சி கிழக்கு தொகுதிக்குட்டப்பட்ட காந்தி மார்க்கெட், பாலக்கரை உள்ளிட்ட பகுதிகளில் நடந்து சென்று வாக்கு சேகரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்கிருந்த டீக்கடை ஒன்றில் தேநீர் அருந்தினார்.

தொடர்ந்து திருச்சி உழவர் சந்தை பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், ஈபிஎஸ் முழு சங்கியாகவே மாறிவிட்டதாகவும், அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டின் பெயரை தட்சிண பிரதேசம் என மாற்றக்கூட தயங்க மாட்டார்கள் எனவும் விமர்சித்தார்.

அதேபோல், ஆம்பூரில் பரப்புரையில் ஈடுபட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அரசியலில் ஈபிஎஸ்-க்கு நிகரான தனது அனுபவம் குறித்து பேசினார். சிவகங்கையில் அதிமுக கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரையில் ஈடுபட்ட எடப்பாடி பழனிசாமி, தன் மீதான விமர்சனங்களுக்கு பதிலளித்தார். மேலும் பாஜகவுடன் திமுகவும் கூட்டணி வைத்ததாகவும் குற்றஞ்சாட்டினார்.

மாலையில், கரூரில் பரப்புரையில் ஈடுபட்ட முதலமைச்சர் ஸ்டாலின், பாஜகவுடன் கூட்டணி குறித்த ஈபிஎஸின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்தார். அப்போது, பாஜகவுடன் கூட்டணி வைத்தோமே தவிர, கட்சியை அடகு வைக்கவில்லை என முதலமைச்சர் ஸ்டாலின் பதிலடி கொடுத்தார்.

முன்னதாக, கோவை தெற்கு தொகுதிற்குட்பட்ட பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட நாம் தமிழர் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மிக்ஸி, பிரிட்ஜ் போன்ற எந்த இலவசங்களையும் தான் தர மாட்டேன் என்றார். தன்னையும் நம்பாமல், மக்களையும் நம்பாமல் இருப்பவர்தான் 2 தொகுதிகளில் போட்டியிடுவார் என்றும் சினிமாவில் தான் உச்சம் என பேசுபவருக்கே தன் மீது நம்பிக்கையில்லை எனவும் தவெக தலைவர் விஜயின் பெயரை குறிப்பிடாமல் சீமான் விமர்சித்தார்.

## தேமுதிகக்கு உயிர் கொடுத்தது அதிமுக! எடப்பாடி பழனிச்சாமி பேச்சு!



அதிமுகவிற்கு துரோகம் செய்தவர்கள் நிலைத்து நிற்க மாட்டார்கள் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். தேமுதிக கட்சி சிரமத்தில் இருந்தபோது அதற்கு உயிர் கொடுத்தது அதிமுக தான் என்றும் அவர் கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு அரசு நிதி உதவி, உயிரிழப்பிற்கு நஷ்டஈடு, வீரர்களுக்கு காப்பீடு வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.

மேலும், தற்போதைய ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும், போதைப் பொருள் விற்பனை அதிகரித்துள்ளதாகவும் குற்றம்சாட்டினார். அரசு இதை கட்டுப்படுத்த தவறிவிட்டது என்றும் விமர்சித்தார்.

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், ஊழல் அதிகரித்துள்ளதாகவும் கூறினார். திமுக மற்றும் ஊழலை பிரித்துப் பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

வரும் தேர்தலில் அதிமுக ஆட்சி அமைக்கும் என்றும், திமுக கூட்டணிகள் பலவீனமடைந்து வருவதாகவும் கூறி, அதிமுகவிற்கு மக்கள் ஆதரவு தர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

## தமிழகத்தின் புதிய டிஜிபியாக சந்தீப் ராய் ரத்தோரை நியமித்தது தேர்தல் ஆணையம்



தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு பொறுப்பில் இருந்த டிஜிபி வெங்கட்ராமன் மாற்றப்பட்டு, புதிய டிஜிபியாக சந்தீப் ராய் ரத்தோர் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1992-ஆம் ஆண்டு பேட்ச் ஐபிஎஸ் அதிகாரியான ரத்தோர் தற்போது பயிற்சி கல்லூரி டிஜிபியாக பணியாற்றி வந்தார்.

அதேபோல், தமிழகத்தில் சில ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளும் மாற்றப்பட்டுள்ளனர்.

சேலம் மாவட்ட ஆட்சியராக இருந்த பிருந்தா தேவி மாற்றப்பட்டு, அருண் தம்புராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக இருந்த இளம் பகவத் மாற்றப்பட்டு, விஷ்ணு மகாஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுரை காவல் ஆணையராக இருந்த லோகநாதன் மாற்றப்பட்டு, அபிஷேக் தீக்ஷித் நியமிக்கப்பட்டுள்ளார். தாம்பரம் காவல் ஆணையராக இருந்த அமல்ராஜ் மாற்றப்பட்டு, சஞ்சய் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், மேற்கு மண்டல ஐஜியாக ரம்யா பாரதி நியமிக்கப்பட்டுள்ளார்.

## திமுக, பாஜக இரண்டையும் நம்ப வேண்டாம்! திருச்சியில் விஜய் ஆவேச பேச்சு!

மக்கள் திமுக மற்றும் பாஜக மீது நம்பிக்கை வைக்கக் கூடாது என்று திருச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் தவெக தலைவர் விஜய் தெரிவித்தார். அவர் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் போட்டியிடுகிறார். பெரம்பூரில் வேட்புமனு தாக்கல் செய்த அவர், ஏப்.2 அன்று திருச்சியிலும் தாக்கல் செய்து பிரச்சாரத்தை தொடங்கினார்.

மரக்கடை பகுதியில் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து உரையாற்றிய விஜய், கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் காரணம் என்றும், இதற்கு முதலமைச்சர் ஸ்டாலின் தீர்வு காணவில்லை என்றும் விமர்சித்தார்.

அன்னபூரணி திட்டம் மூலம் ஆண்டுக்கு 6 கியாஸ் சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும், திருமணத்திற்கு தங்கம் மற்றும் பட்டு சேலை, இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.2,500 வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.



மேலும், நகராட்சி நிர்வாகத்தில் ஊழல் அதிகம் என்றும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி, திமுக அரசை மாற்ற வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

'ஜனநாயகன்' படம் வெளியீடு தடை மற்றும் கரூர் சம்பவம் சூழ்ச்சி என கூறிய விஜய், திமுகவும் பாஜகவையும் நம்ப வேண்டாம் என்றார்.

பிரச்சாரம் முடிந்தபின், அவரது வாகனத்திற்கு பின்னால் வந்த கார் மோதி காவலர் சதீஷ் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 2026 தேர்தல்: ஜென் Z வாக்காளர்களே தீர்மான சக்தி

த மிழக த்தில் நடைபெற உள்ள 2026 ச ட்டப்பேரவைத் தேர்தலில் ஜென் இசெட் (Gen Z) வாக்காளர்கள் முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளனர். சுமார் 1.18 கோடி இளம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளதால், அரசியல் கட்சிகள் இளைஞர்களை இலக்காகக் கொண்டு தீவிர பிரச்சாரம் நடத்துகின்றன.

ஜென் இசெட் தலைமுறை இணையம், ஸ்மார்ட்போன், சமூக ஊடகங்களில் அதிகம் செயல்படும் தலைமுறையாகும். பாரம்பரிய அரசியல் விசுவாசத்தை விட, வேலை, கல்வி, வாய்ப்பு போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வாக்களிக்கின்றனர்.

இதனால், அரசியல் கட்சிகள் டிஜிட்டல் பிரச்சாரத்தை அதிகரித்துள்ளன. திமுக தொடர்ந்து ஆட்சி மற்றும் மேம்பாடு என்ற முழக்கத்துடன் இளைஞர்களை ஈர்க்க முயல்கிறது. அதிமுக நலத்திட்டங்கள் மற்றும் கல்வி தொடர்பான வாக்குறுதிகள் மூலம் ஆதரவை பெற முயல்கிறது.

பாஜகவின் அண்ணாமலை சமூக ஊடகங்களில் ஆக்டிவாக இருப்பதால் இளைஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். நடிகர் விஜய்யின் அரசியல் வருகை முதல் முறை வாக்காளர்களிடையே புதிய ஆர்வத்தை உருவாக்கியுள்ளது.



சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி தமிழ் அடையாளம் மற்றும் இயற்கை சார்ந்த கருத்துகளால் இளைஞர்களை ஈர்க்கிறது. ஆனால், சமூக ஊடக ஆதரவை வாக்குகளாக மாற்றுவது சவாலாக உள்ளது.

அரசியல் ஆய்வாளர்கள் கருத்துப்படி, ஜென் இசெட் வாக்காளர்கள் ஒரே கட்சிக்கு திரளாமல், பிரச்சினை அடிப்படையில் பல்வேறு கட்சிகளுக்கு வாக்குகளை பிரிப்பார்கள். 2026 தேர்தலில் யார் வெல்வார்கள் என்பதைவிட, இளைஞர்கள் எவரை தேர்வு செய்கிறார்கள் என்பதே முக்கியமாக பார்க்கப்படுகிறது.

## "நான் தவறாக பேசவில்லை" எடப்பாடி பழனிசாமிக்கு உதயநிதி ஸ்டாலின் பதில்!

உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரத்தில், எடப்பாடி பழனிச்சாமி குறித்த விமர்சனங்களுக்கு பதிலளித்து, தாம் தவறாக பேசவில்லை என்றும் "முரட்டு தொண்டன்" என்று அல்ல, "முரட்டு அடிமை" என கூறியதாக விளக்கம் அளித்தார். மேலும், திமுக அரசு கடந்த தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளதாகவும், மகளிர் இலவச பேருந்து பயணம், காலை உணவுத் திட்டம், கல்வி உதவித்தொகை, இலவச மடிக்கணினி உள்ளிட்ட பல நலத்திட்டங்களை எடுத்துக்காட்டினார்.

அத்துடன், மகளிர் உரிமைத்தொகை,



இல்லத்தரசி திட்டம், வேலைவாய்ப்பு மற்றும் வீடமைப்பு உள்ளிட்ட புதிய வாக்குறுதிகளையும் அறிவித்து, பாஜக மற்றும் அதிமுக மீது கடும் விமர்சனம் செய்தார். தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்கவும், திமுக ஆட்சி தொடரவும் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

## தவெக போட்டி திமுக வெற்றியை பாதிக்காது: சபரீசன்

வரும் சட்டமன்ற தேர்தலில் தவெக பங்கேற்பது திமுகவின் வெற்றியைப் பாதிக்காது என்று முதல்வரின் மருமகன் சபரீசன் தெரிவித்துள்ளார்.

சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் திமுக வேட்பாளர் கார்த்திக் மோகனுக்கு ஆதரவாக சிட்கோ நகரில் நடைபெற்ற கூட்டத்தில் சபரீசன் மற்றும் செந்தாமரை கலந்து கொண்டனர். அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் பங்கேற்று திமுக அரசின் சாதனைகள் குறித்து பேசினர்.

அப்போது சபரீசன், "நான் வேறு, வேட்பாளர் வேறு அல்ல; அவரை வெற்றி பெற செய்யுங்கள்" என்று கூறினார்.



பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும், நலத்திட்டங்களின் அடிப்படையில் வெற்றி உறுதி என்றும் தெரிவித்தார். மேலும், தவெக போட்டியிடுவது திமுகவின் வெற்றியை பாதிக்காது என்றும் கூறினார்.வ்

## அமைதிப் பேச்சு நடுவே தாக்குதல்: ஈரான் மூத்த தலைவரின் வீடு குறிவைத்து குண்டுவீச்சு

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே 34-வது நாளாக போர் நீடித்தது. ஈரான் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கமல்கராஸி (81), அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார்.

இந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த சூழலில் ஈரான் மீதான தாக்குதல்களை அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் தீவிரப்படுத்தின. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள கமல்கராஸியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் அவர் படுகாயம் அடைந்தார். அவரது குடும்ப உறுப்பினர்கள் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அமெரிக்காவுடன் அமைதிப்



பேச்சுவார்த்தை நடத்திய ஈரான் மூத்த தலைவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

மேலும் ஈரான் தலைநகர் டெஹ்ரான் அருகேயுள்ள தொழிற்சாலைகளை குறி வைத்து அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் அதிதீவிர தாக்குதல்களை நடத்தின. இதற்கு பதிலடியாக மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவ மையங்களை குறி வைத்து ஈரான் ராணுவம் ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது.

# தலையங்கம்

## எல்பிஜி விலை உயர்வு: மக்களுக்கு இரட்டை சுமை



நாட்டில் வர்த்தக எல்பிஜி சிலிண்டர்களின் விலை மீண்டும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. எண்ணெய் நிறுவனங்கள் 19 கிலோ சிலிண்டரின் விலையை ரூ.203 வரை அதிகரித்துள்ளன. ஏற்கனவே கடந்த மார்ச் 1-ஆம் தேதி ரூ.114.50 உயர்வு செய்யப்பட்டிருந்த நிலையில், ஒரே மாதத்திற்குள் இரண்டாவது முறையாக இந்த உயர்வு அமல்படுத்தப்பட்டிருப்பது மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விலை உயர்வு சிறு வணிகர்கள், குறிப்பாக ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களை நடத்துவோருக்கு நேரடியான சுமையை ஏற்படுத்தியுள்ளது. உலகளவில் நிலவும் போர் சூழ்நிலை காரணமாக கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சமீபத்திய தகவல்களின் படி, உலக எண்ணெய் விலை சுமார் 50 சதவீதம் உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. இறக்குமதியை அதிகமாக நம்பும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், ஈரான் தொடர்பான பதற்றம் மற்றும் ஹோர்முஸ் நீரிணை மூடல் போன்ற காரணங்களால் எரிவாயு விநியோகத்தில் தடைகள் உருவாகி, சிலிண்டர் தட்டுப்பாடும் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, நாடு முழுவதும் ஹோட்டல்கள் மற்றும் டீக்கடைகளில் விலைகள் உயர்ந்து வருகின்றன. சில இடங்களில் வணிகத்தை தொடர முடியாமல் பல ஹோட்டல்கள் மூடப்படுகின்றன.

இந்நிலையில், தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், அசாம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல்கள் நடைபெற்று வருவதால், வீட்டு பயன்பாட்டிற்கான 14.2 கிலோ எரிவாயு சிலிண்டர் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. இது பொதுமக்களுக்கும் இல்லத்தரசிகளுக்கும் தற்காலிக நிவாரணத்தை வழங்கியுள்ளது. ஆனால், தேர்தல்கள் முடிந்த பின் வீட்டு சிலிண்டர் விலையும் உயரக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

மேலும், சிலிண்டர் முன்பதிவு செய்ய வேண்டிய கால இடைவெளியையும் அதிகரிக்க ஒன்றிய அரசு பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. விலை உயர்வுடன் சேர்ந்து முன்பதிவு சிரமமும் அதிகரித்தால், அது மக்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தும்.

தற்போது, விலை உயர்வுடன் சேர்ந்து தட்டுப்பாடு பிரச்சினையும் நிலவுகிறது. நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் எல்பிஜி நெருக்கடி, அதிகரித்து வரும் செலவுகள், விநியோக தடைகள் மற்றும் தேவை-வழங்கல் சமநிலையின்மை ஆகியவற்றின் கூட்டு விளைவாகும். இந்த நிலைமை வணிகங்களுக்கும் போக்குவரத்து துறைக்கும் கூடுதல் அழுத்தத்தை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக, எல்பிஜியை பெரிதும் நம்பும் ஆட்டோ ரிக்க்ஷா ஓட்டுநர்கள் கடுமையான சவால்களை சந்தித்து வருகின்றனர். எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசைகள், சரியான இருப்பு இல்லாமை மற்றும் மாறும் விலை நிர்ணயம் ஆகியவை அவர்களின் தினசரி வாழ்க்கையை பாதிக்கின்றன. எரிபொருள் பெற பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், அவர்களின் வருமானமும் குறைகிறது.

இந்த நெருக்கடி வர்த்தக பயன்பாட்டைத் தாண்டி விரைவில் வீட்டு பயன்பாட்டிற்கும் பரவக்கூடும் என்ற அச்சம் உள்ளது. ஒன்றிய அரசு தூரநோக்கு அணுகுமுறையுடன் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் வீடுகளுக்கு சமையல் எரிவாயு கிடைப்பதில் பெரிய சிக்கல் உருவாகும் அபாயம் தெளிவாக உள்ளது.

## திருவள்ளுவர் கலை இலக்கிய மன்ற 10 ஆம் ஆண்டு விழா



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கூடுவாஞ்சேரி அருகிலுள்ள மாடம்பாக்கம் கிராமத்தில் திருவள்ளுவர் கலை இலக்கிய மன்றத்தின் 10ஆம் ஆண்டு விழா கடந்த 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மன்றத்தின் தலைவர் திரு. E. திருநாவுக்கரசு தலைமை தாங்கினார். செயலாளர் திரு. டில்லிராஜ் வரவேற்புரையாற்றினார். பொருளாளர் திரு. முல்லைநாதன் முன்னிலை வகித்தார். தொடர்ந்து, 10ஆம் ஆண்டு சிறப்பு மலரை ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ரா. தீபக்ராஜ் அவர்கள் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் மன்றத்தைச் சேர்ந்த கவிஞர்கள் திரு. ஆரோக்கிய பிரிட்டோ மற்றும் திரு. காசி ஆறுமுகம் ஆகியோருக்கு பாராட்டு வழங்கப்பட்டது. பின்னர், "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினராக சன் டிவி புகழ் "அசத்தப் போவது யாரு" நிகழ்ச்சியின் கவிஞர் திரு. கிருபானந்தம் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, மாடம்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் பங்கேற்று திருக்குறள் ஒப்பிவைத்தல், நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், சிலம்பம், கவிதை, யோகா, நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தினர்.

மேலும், "திருக்குறளில் வாழ்வியல் சிந்தனை", "திருக்குறளில் பெண்ணிய சிந்தனை", "திருக்குறளில் மருத்துவம்", "பிறப்பால் அனைவரும் சமம்" ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்றது.

எங்கள் பகுதியில் உள்ள நீலன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவி R. பவித்ரா, 1330 திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்ட ரூ.15,000 ரொக்கப் பரிசைப் பெற்றார். அதே பள்ளியில் பயிலும் மாணவர் R. ரூபேஷ், திருக்குறள் வினாடி வினாவில் கலந்து கொண்டு ரூ.1,200 ரொக்கப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் தமிழக முதல்வர் அவர்களால் பெற்றார்.

இவ்விரு மாணவர்களையும் மன்றம் சார்பில் பாராட்டி பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியை மன்ற உறுப்பினர் திரு. ஆரோக்கிய பிரிட்டோ தொகுத்து வழங்கினார். இறுதியாக பொருளாளர் திரு. முல்லைநாதன் நன்றியுரை வழங்க, தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

வாழ்க தமிழ்!

வளர்க திருவள்ளுவர் கலை இலக்கிய மன்றம்!

செய்தியாளர்
M. பாலசுப்பிரமணியன்

## ஆயுத ஏற்றுமதியில் இந்தியா புதிய மைல் கல்!



கடந்த நிதியாண்டில் ஆயுத ஏற்றுமதி ரூ.38,424 கோடியாக அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கூறியுள்ளதாவது: "2025- 26ம் நிதியாண்டில் நமது நாட்டில் இருந்து ரூ.38,424 கோடி மதிப்பிலான பாதுகாப்புத் தளவாடங்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இது முந்தைய நிதியாண்டைக் காட்டிலும் 62 சதவீதம் அதிகமாகும்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பாதுகாப்புத் தளவாடங்களுக்கு உலக நாடுகளிடையே பெரிய அளவில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால் தான் நமது நாட்டில் இருந்து பாதுகாப்புக் கருவிகள் ஏற்றுமதியும் முன்பை விட அதிகரித்துள்ளது. பாதுகாப்புத் தளவாட பிரிவில் ரூ.38,424 கோடி அளவுக்கு இது வரை ஏற்றுமதியே நடந்ததில்லை. இது ஒரு மைல்கல் சாதனையாகும்.

முந்தைய நிதியாண்டைக் காட்டிலும் ரூ.14,802 கோடி கூடுதலாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் 54.84 சதவீதம் பொதுத்துறை பாதுகாப்பு நிறுவனங்களில் இருந்தும், 45.15 சதவீதம் தனியார் நிறுவனங்களில் இருந்தும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது பொதுத்துறை -தனியார் கூட்டு மற்றும் தற்சார்புடைய பாதுகாப்புச் சூழலமைப்பின் வல்லமையை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## உலக நெருக்கடியில் தங்கம் சேகரிக்கும் சீனா: டாலருக்கு சவால்?



மத்திய கிழக்கு போரால் உலகளவில் எண்ணெய், எரிவாயு நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில், China அமைதியாக தங்கம் மற்றும் வெள்ளி கையிருப்பை அதிகரித்து வருகிறது. கடந்த 16 மாதங்களில் அதிக அளவில் தங்கம் வாங்கியதுடன், 2026ஆம் ஆண்டு மட்டும் 790 டன்களுக்கும் மேற்பட்ட வெள்ளியையும் இறக்குமதி செய்துள்ளது.

World Gold Council தகவல்படி, சீனா தனது மத்திய வங்கியின் மூலம் தங்க இருப்பை தொடர்ந்து உயர்த்தி, தற்போது 2,300 டன்களைத் தாண்டியுள்ளது. இதன் மூலம் அமெரிக்க டாலர் ஆதிக்கத்தை குறைத்து, தனது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முயற்சியில் உள்ளது.

உலகளவில் மத்திய வங்கிகள் தங்கத்தில் முதலீட்டை அதிகரித்து வரும் நிலையில், சீனாவின் இந்த நடவடிக்கை எதிர்கால பொருளாதார மற்றும் நாணய அரசியலில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

## தமிழக தேர்தல் 2026:

### 5,938 பதற்ற வாக்குச்சாவடிகள், தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்



தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் பணிகள் தீவிரமடைந்துள்ளன. மாநிலம் முழுவதும் 5,938 பதற்றமான மற்றும் மிகப் பதற்றமான வாக்குச்சாவடிகள் அடையாளம் காணப்பட்டு, கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏப்ரல் 23 அன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது.

மொத்தம் ரூ.1302 கோடி தேர்தல் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பறக்கும் படையினர் கண்காணிப்பு, புகார் நடவடிக்கைகள், மற்றும் ரூ.462 கோடி மதிப்பிலான பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிக வெப்பத்தை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேவையான வசதிகளும் செய்யப்படுகின்றன.

5 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ள நிலையில், இந்த தேர்தல் தமிழக அரசியல் வரலாற்றில் முக்கியத்துவமானதும் கணிக்க முடியாததுமானதாக கருதப்படுகிறது.

## 100% வாக்குப்பதிவுக்காக கரூரில் மினி மாரத்தான் விழிப்புணர்வு நிகழ்ச்சி




கரூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, 100% வாக்களிப்பதன் அவசியத்தை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக கரூர் மாவட்டத்தில் 28.03.2026 அன்று மினி மாரத்தான் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.ரவிக்குமார் IAS, அவர்கள் தலைமையிலும், காவல் கண்காணிப்பாளர் திரு.D.N. ஹரி கிரண் பிரசாத் IPS, அவர்கள் முன்னிலையிலும் துவக்கிவைக்கப்பட்டது. பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்று, ஜனநாயக கடமையான வாக்களிப்பில் ஈடுபட வேண்டுமென விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## சாத்தான்குளம் வழக்கு தீர்ப்பு: 9 போலீசாருக்கு மரண தண்டனை!




சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நடந்த தந்தை-மகன் ஜெயராஜ், பென்னிக்ஸ் கொலை வழக்கில் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட 9 போலீசாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதுடன், அபராதமும் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பு தாமதமானதாயினும் நீதியானதாக பலர் வரவேற்றுள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் இது பாமர மக்களுக்கு கிடைத்த நீதி என்றும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும், குற்றவாளிகள் மேல்முறையீடு செய்தாலும், இறுதி வரை நீதிக்காக போராடுவோம் என குடும்பத்தினர் உறுதியாக தெரிவித்துள்ளனர்.

## எரிவாயு நெருக்கடி மத்தியில் டெல்லியில் PNG விதிகள் கடுமை:

### PNG இணைப்பு கட்டாயம்



மத்திய கிழக்கு பதற்றத்தால் உலகளவில் எரிவாயு நெருக்கடி உருவான நிலையில், இந்தியாவில் நிலைமை கட்டுக்குள் உள்ளது. Delhi அரசு, வர்த்தக எல்பிஜி சிலிண்டர் விநியோக விதிகளை கடுமையாக்கியுள்ளது.

புதிய விதிகளின்படி, பிஎன்ஜி (PNG) வசதி உள்ள பகுதிகளில் ஹோட்டல்கள், உணவகங்கள் உள்ளிட்ட வணிகங்கள் கட்டாயமாக பிஎன்ஜி இணைப்பைப் பெற வேண்டும் அல்லது விண்ணப்பிக்க வேண்டும். இதை பின்பற்றினால்தான் எல்பிஜி விநியோகம் கிடைக்கும்.

இதே நேரத்தில், இந்தியாவில் எல்பிஜி பற்றாக்குறை இல்லை என்றும், போதுமான கையிருப்பு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த புதிய விதிகள் எரிவாயு பயன்பாட்டை சீரமைத்து, நீண்ட காலத்தில் நெருக்கடியை சமாளிக்க உதவும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

## நீட் 2026: சாதனை அளவில் 26 லட்சம் மாணவர்கள் விண்ணப்பம்





2026-27 கல்வியாண்டிற்கான NEET தேர்வுக்கு இதுவரை இல்லாத அளவில் 26 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். National Testing Agency நடத்தும் இந்த தேர்வு மே 3, 2026 அன்று நாடு முழுவதும் மற்றும் வெளிநாடுகளில் மொத்தம் 552 நகரங்களிலும் 16 சர்வதேச மையங்களிலும் நடைபெற உள்ளது.

MBBS, BDS உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை இந்த தேர்வின் மூலம் நடைபெறுகிறது. ஆண்டுதோறும் விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் போட்டியும் கடுமையாகியுள்ளது.

இந்த தேர்வு 13 மொழிகளில் நடைபெறும்; மொத்தம் 180 கேள்விகள் கேட்கப்பட்டு 720 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெறும். தவறான பதில்களுக்கு நெகட்டிவ் மார்க்கும் வழங்கப்படும்.

## காரைக்குடி தேர்தல் களம்: சீமானை 'சுற்றுலா வேட்பாளர்' என விமர்சித்த கார்த்தி சிதம்பரம்




சிவகங்கை தொகுதி எம்.பி. கார்த்திக் சிதம்பரம், காரைக்குடியில் போட்டியிடும் சீமான் மீது கடும் விமர்சனம் முன்வைத்துள்ளார். சீமான் ஒரு "தேர்தல் சுற்றுலாப் பயணி" என்றும், காரைக்குடியுடன் அவருக்கு தொடர்பே இல்லை என்றும் கூறினார்.

முன்னதாக திருவொற்றியூரில் தோல்வியடைந்த அவர், இங்கும் அதே நிலை சந்திப்பார் என்றும், மக்கள் உள்ளூர் வேட்பாளரான காங்கிரஸ் வேட்பாளர் எஸ். மாங்குடிக்கே ஆதரவு அளிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில், நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடும் நிலையில், சீமான் காரைக்குடியில் தீவிர பிரச்சாரம் செய்து வருகிறார். கார்த்தி சிதம்பரத்தின் இந்த விமர்சனம் தேர்தல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## விவசாயிகளுக்கு ரிசிசி கடன் சலுகைகள் விரிவு



மத்திய அரசு Kisan Credit Card திட்டத்தை வலுப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. விவசாயிகள் எளிதாகவும் டிஜிட்டல் முறையிலும் கடன் பெறுவது இதன் முக்கிய நோக்கமாகும்.

Reserve Bank of India விதிமுறைகளின்படி, வங்கிகள் தங்களின் கடன்களில் குறைந்தது 18% விவசாயத்திற்கும், அதில் 10% சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஒதுக்க வேண்டும்.

மேலும், KCC திட்டம் கால்நடை, பால்வளம், மீன்வளம் போன்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 7% வட்டியில் கடன் வழங்கப்பட்டு, சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தினால் 3% சலுகை வழங்கப்படுவதால், விவசாயிகள் 4% வட்டியில் கடன் பெற முடிகிறது.

பிணையமில்லா கடன் வரம்பு ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதால், சிறு விவசாயிகளுக்கு இது மேலும் உதவியாக இருக்கும்.

## ஏடிஎம் மற்றும் யூபிஐ பரிவர்த்தனைகளில் புதிய விதிமுறைகள்

### தெரிந்துகொள்ள வேண்டியது





ஏப்ரல் 1 முதல் ஏடிஎம் பரிவர்த்தனை விதிகளில் முக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இனி யூபிஐ மூலம் ஏடிஎம்களில் பணம் எடுப்பதும் இலவச பரிவர்த்தனை வரம்பில் சேர்க்கப்பட்டுள்ளது. முன்பு தனித்தனியாக கணக்கிடப்பட்ட இவை, இப்போது டெபிட் கார்டு பரிவர்த்தனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

வரம்பை மீறிய பிறகு, ஒவ்வொரு கூடுதல் பரிவர்த்தனைக்கும் ரூ.23 மற்றும் வரி வசூலிக்கப்படும். பொதுவாக, சொந்த வங்கி ஏடிஎம்களில் 5 இலவச பரிவர்த்தனைகள் கிடைக்கும். மற்ற வங்கி ஏடிஎம்களில் பெருநகரங்களில் 3 மற்றும் பிற பகுதிகளில் 5 இலவச பரிவர்த்தனைகள் வழங்கப்படுகின்றன.

சில வங்கிகள் பணம் எடுக்கும் வரம்பையும் குறைத்துள்ளன. முன்பு ரூ.1 லட்சம் வரை இருந்த தினசரி வரம்பு, சில கார்டுகளில் ரூ.50,000 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பிரீமியம் கார்டுகளின் வரம்பும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், யூபிஐ மூலம் எடுக்கும் பணமும் மாதாந்திர இலவச வரம்பில் சேர்க்கப்படும்.

கட்டணத்தை தவிர்க்க, தேவையான பணத்தை ஒரே முறையில் எடுப்பது நல்லது. மேலும், சொந்த வங்கி ஏடிஎம்களை பயன்படுத்தவும், சிறிய செலவுகளுக்கு யூபிஐ மற்றும் மொபைல் பேங்கிங் பயன்பாடுகளை பயன்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது.

## பிரிவு 194-IB: வாடகைக்கு TDS கட்டாயம் புறக்கணித்தால் ₹1 லட்சம் அபராதம்!



புதிய வருமான வரிச் சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. இதில் பிரிவு 194-IB சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வருமான வரி விதியைப் புறக்கணிப்பது இழப்புகளுக்கு வழிவகுக்கும். பிரிவு 194-IB-ன் கீழ் குத்தகைதாரர்கள் வீட்டு உரிமையாளரின் வாடகையிலிருந்து TDS-ஐப் பிடித்தம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் வட்டியுடன் சேர்த்து 1 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம். இந்தப் புதிய விதிமுறை வரி தணிக்கைக்கு உட்படாத தனிநபர்கள் மற்றும் இந்து கூட்டுக் குடும்பங்களுக்குப் (HUFs) பொருந்தும்.

**பிரிவு 194-IB என்றால் என்ன?**

பிரிவு 194-IB என்பது வருமான வரிச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். இது 2017ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் வாடகை வருமானத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவருவதாகும். முன்னதாக, குத்தகைதாரர்கள் பெரும்பாலும் வீட்டு வாடகைப்படி (HRA) சலுகைகளைக் கோரினர். ஆனால் வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வரிக் கணக்குகளில் வாடகை வருமானத்தை வெளியிடத் தவறினர். இந்த விதிமுறை இரு தரப்பினரிடமிருந்தும் அரசுக்குத் தகவல்களை வழங்குகிறது. பிரிவு 44AB-இன் கீழ் வரி தணிக்கைக்கு உட்படத் தேவையில்லாத தனிநபர்கள் மற்றும் இந்து கூட்டுக் குடும்பங்களுக்கு இந்த விதி பொருந்தும். மாத வாடகை 50,000 ரூபாயைத் தாண்டினால் ஒரு மாத வாடகை மட்டுமே செலுத்தப்பட்டாலும், TDS பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

**புதிய விதிமுறை என்ன?**

உதாரணமாக, நீங்கள் ஒவ்வொரு மாதமும் 60,000 ரூபாய் வாடகை செலுத்துகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இது ரூ. 7.2 லட்சத்திற்கு சமம். இந்த ரூ. 7.2 லட்சத்தில் நீங்கள் 2 சதவீத TDS பிடித்தம் செய்ய வேண்டும். இந்தத் தொகையை மார்ச் மாத வாடகையிலிருந்து பிடித்தம் செய்ய வேண்டும். நீங்கள் வீட்டை முன்கூட்டியே காலி செய்தால் அதை கடைசி மாத வாடகையிலிருந்து பிடித்தம் செய்ய வேண்டும். இந்த TDS தொகையை பின்னர் அரசிடம் செலுத்த வேண்டும்.

**TDS விகிதம் என்ன?**

முன்னதாக, 50,000 ரூபாய்க்கு மேல் உள்ள வாடகைகளுக்கான TDS விகிதம் 5 சதவீதமாக இருந்தது. இருப்பினும், 2024 மத்திய பட்ஜெட்டைத் தொடர்ந்து 2024 அக்டோபர் 1 முதல் இது 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. முன்னதாக, வீட்டு உரிமையாளர் பான் எண்ணை வழங்கவில்லை என்றால் 20 சதவீத TDS விதிக்கப்பட்டது. இருப்பினும், புதிய விகிதம் இந்த செயல்முறையை எளிதாக்கியுள்ளது. TDS வாடகைத் தொகையில் மட்டுமே கழிக்கப்படுகிறது. ஜிஎஸ்டி தனியாகக் கழிக்கப்படுவதில்லை.

**TDS எப்படிப் பிடித்தம் செய்யப்படும்?**

TDS-ஐப் பிடித்தம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடு உள்ளது. இது பொதுவாக நிதியாண்டின் கடைசி மாதமான மார்ச் மாதத்தில் வாடகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. நீங்கள் நிதியாண்டின் நடுவில் உங்கள் வீட்டைக் காலி செய்தால் கடைசி மாத வாடகையிலிருந்து TDS பிடித்தம் செய்யப்பட வேண்டும். TDS தொகையை 30 நாட்களுக்குள் வருமான வரித் துறையில் செலுத்த வேண்டும்.

**வீட்டு உரிமையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்!**

வாடகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட 2 சதவீத TDS தொகையை 30 நாட்களுக்குள், அதாவது ஏப்ரல் 30ஆம் தேதிக்குள், அரசிடம் செலுத்த வேண்டும். TDS தொகையைச் செலுத்துவதற்கு படிவம் 26QC-ஐ தாக்கல் செய்ய வேண்டும். கூடுதலாக, வீட்டு உரிமையாளர் படிவம் 16C-ஐ சமர்ப்பிக்க வேண்டும். இந்த TDS, வீட்டு உரிமையாளரின் படிவம் 26AS-இல் பிரதிபலிக்கும். அவர் அதைத் தனது வரிகளுக்கு எதிராக சரிசெய்து கொள்ளலாம். பிரிவு 271H-இன் கீழ், TDS கணக்குகளைத் தாக்கல் செய்யாததற்கு ரூ. 1 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

## நார்ச்சத்து உணவுகள்: செரிமானத்தை தாண்டி மூளை ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும் சக்தி



நாம் அன்றாடம் சாப்பிடும் நார்ச்சத்து நிறைந்த உணவுகள் செரிமானத்திற்கு மட்டுமே உதவும் என்ற எண்ணம் இருந்தாலும், சமீபத்திய ஆய்வுகள் அவை மூளையின் ஆரோக்கியத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, 'குடல்-மூளை அச்சு' (Gut-Brain Axis) எனப்படும் அமைப்பின் மூலம், குடலில் உள்ள நன்மைபுரியும் பாக்டீரியாக்கள் நார்ச்சத்தை உடைத்து, மூளைக்கு பயனளிக்கும் குறுகிய சங்கிலி கொழுப்பு அமிலங்களை உருவாக்குகின்றன. இவை மூளையில் ஏற்படும் வீக்கத்தை குறைத்து, நினைவாற்றல் மற்றும் சிந்தனை திறனை மேம்படுத்துகின்றன.

ஆய்வுகளின்படி, அதிக நார்ச்சத்து உணவு எடுத்துக்கொள்பவர்களுக்கு மறதி நோய் அபாயம் குறைவாக இருப்பதுடன், மனநிலை, கவனக்குறைவு மற்றும் தூக்கத் தரமும் மேம்படுகின்றன. மேலும், நார்ச்சத்து ரத்த சர்க்கரை அளவை சீராக வைத்துக் கொண்டு, மூளையின் செயல்திறனை உயர்த்துகிறது. உடல் எடை குறைப்பு, கொலஸ்ட்ரால் கட்டுப்பாடு மற்றும் வகை-2 சர்க்கரை நோய் தடுப்பு போன்ற பல உடல்நல நன்மைகளும் கிடைக்கின்றன.

எனவே, தினசரி உணவில் பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் முழுத் தானியங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில், நார்ச்சத்தை திடீரென அதிகப்படுத்தாமல், மெதுவாக அதிகரித்து, போதுமான தண்ணீர் குடிப்பது அவசியம் என்பதும் முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது.

# இந்திய செய்திகள்

## சமூக வலைத்தள பதிவுகள் மீது நேரடி கண்காணிப்பு:

### மத்திய அரசின் புதிய வரைவு விதிகள் சர்ச்சை



மத்திய அரசு, சமூக வலைத்தளங்களில் உள்ள தனிநபர் பதிவுகளை நேரடியாக கண்காணித்து, பிரச்சனை உள்ளதாக கருதப்படும் பதிவுகளை நீக்குமாறு பயனர்களுக்கு அறிவிப்புகளை வழங்கும் புதிய நடைமுறையை அறிமுகப்படுத்த முயற்சித்து வருகிறது. தற்போது நடைமுறையில் உள்ள தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021 ஆன்லைன் செய்தி நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் நிலையில், இந்த புதிய வரைவுத் திருத்தங்கள் சமூக வலைத்தள பயனர்களுக்கும் விரிவுபடுத்தப்படுகின்றன.

இந்த முன்மொழிவின்படி, அரசின் உத்தரவுகளை பின்பற்றாதால், சம்பந்தப்பட்ட சமூக வலைத்தள நிறுவனங்களே சட்டப்பூர்வ பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை உருவாகும். இதற்கு எதிராக 'இன்டர்நெட் ஃப்ரீடம்' போன்ற அமைப்புகள், பயனர்களின் தனியுரிமை பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளன. அதேசமயம், பாதுகாப்பான மற்றும் நம்பகமான இணையத்தை உறுதி செய்வதே இந்த முயற்சியின் நோக்கம் என அரசு விளக்கம் அளித்துள்ளது. புதிய விதிகள் குறித்து ஏப்ரல் 14, 2026க்குள் கருத்துகள் கேட்கப்பட்டுள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் இதை தனியுரிமைக்கு எதிரான நடவடிக்கை என கடுமையாக விமர்சித்து வருகின்றன.

## எல்பிஜி தட்டுப்பாடு எதிர்கொள்ள மண்ணெண்ணெய் மீண்டும் பயன்பாடு: தற்காலிக தீர்வா, பின்னோக்கிய பாதையா?



ஈரான் போரால் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தில் ஏற்பட்ட தட்டுப்பாட்டை சமாளிக்க, மத்திய அரசு தற்காலிகமாக மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் சமையல் எரிவாயு இல்லாமல் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு கிடைத்தாலும், இது முன்னேற்றத்திலிருந்து பின்னோக்கிச் செல்லும் நடவடிக்கை என நிபுணர்கள் விமர்சிக்கின்றனர்.

மண்ணெண்ணெய் பயன்பாடு அதிகரிப்பதால் காற்று மாசுபாடு, சுவாசக் கோளாறுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளது. கடந்த காலத்தில் எல்பிஜி பயன்பாடு அதிகரித்து மண்ணெண்ணெய் பயன்பாடு குறைந்திருந்த நிலையில், தற்போதைய சூழல் மீண்டும் அதனை அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே, இது குறுகிய காலத் தீர்வாக மட்டுமே இருக்க வேண்டும்; நீண்ட காலத்திற்கு மின்சார அடுப்புகள், எல்பிஜி மானியம் மற்றும் மாற்று எரிபொருள் வழிகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.

## சத்தீஸ்கர் சிறைகளில் 285 கைதிகள் மரணம்:


### தேசிய மனித உரிமைகள் ஆணையம் தானாக முன்வந்து விசாரணை தொடக்கம்




தேசிய மனித உரிமைகள் ஆணையம், சத்தீஸ்கர் மாநில சிறைகளில் கடந்த சில ஆண்டுகளில் 285 கைதிகள் உயிரிழந்ததாக வெளியான தகவலை அடுத்து, தாமாக முன்வந்து விசாரணை தொடங்கியுள்ளது. கடந்த 13 மாதங்களில் மட்டும் 66 மரணங்கள் பதிவாகியுள்ளன என்பதும் சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் பூபேஷ் பாகல் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பிய நிலையில், மாநில அரசு சில மரணங்களுக்கு நீதித்துறை விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளது. சிறைகளில் அதிக நெரிசல், போதிய மருத்துவ வசதியின்மை போன்ற காரணங்களால் இந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகின்ற நிலையில், இரண்டு வாரங்களில் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## ஈரானுக்கு வாரி வழங்கிய காஷ்மீர் மக்கள்: எல்லைகளை கடந்த மனிதநேயம்



அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படைகள் ஈரான் மீது நடத்தி வரும் தொடர் வான்வழித் தாக்குதல்களால் மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இதனால் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளின் பொருளாதாரமும் இயல்பு வாழ்க்கையும் நிலைகுலைந்துள்ளன.

மனிதாபிமான உதவி:

இக்கட்டான இந்தச் சூழலில், போரால் பாதிக்கப்பட்ட ஈரான் மக்களுக்கு உதவும் நோக்கில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் மார்ச் 22 அன்று பிரம்மாண்டமான நிதி மற்றும் பொருட்கள் திரட்டும் பணி நடைபெற்றது. ஸ்ரீநகர், பாரமுல்லா, பட்காம் போன்ற மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் ஜாதி, மத வேறுபாடின்றி மனிதாபிமான அடிப்படையில் கைகோர்த்தனர்.

வாரி வழங்கிய மக்கள்:

காஷ்மீர் மக்கள் பணத்தை மட்டுமின்றி, தங்களின் பரம்பரைச் சொத்துக்களான செம்பு, வெள்ளி மற்றும் பித்தளை பாத்திரங்களை வழங்கினர்.

வசதி படைத்தவர்கள் ஒரு படி மேலே சென்று, தங்கள் உடையில் அணிந்திருந்த தங்கச் சங்கிலிகள் மற்றும் வளையல்களைத் தானமாக வழங்கியது மனிதநேயத்தின் உச்சத்தை உணர்த்தியது.

குறிப்பாக, சிறுவர் - சிறுமிகள் தாங்கள் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த உண்டியல் பணத்தை அப்படியே வழங்கிய காட்சி பலரையும் நெகிழச் செய்தது.

நன்றியும் பாராட்டும்:

தன்னார்வலர்கள் வீடு வீடாகச் சென்றபோது மக்கள் காட்டிய இந்தத் தாராள மனதை, ஈரான் தூதரகம் தனது 'எக்ஸ்' (X) பக்கத்தில் புகைப்படங்களுடன் பதிவிட்டுள்ளது. "ஈரான் மக்களுக்குத் துணையாக நின்ற காஷ்மீர் மக்களுக்கு மனமார்ந்த நன்றிகள்; இந்த உதவியை ஒருபோதும் மறக்க மாட்டோம்" என ஈரான் தூதரகம் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளது.

ஈரான் மீது திணிக்கப்பட்ட இந்தச் சட்டவிரோதப் போரால் ஏற்பட்டுள்ள பேரழிவைத் தணிக்க, உலக நாடுகள் உதவுவது தார்மீகக் கடமை என காஷ்மீர் மக்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

# உலக செய்திகள்

## ஈரானை கற்காலத்திற்கு கொண்டு செல்வேன்:

### அச்சுறுத்தல் விடுத்த டிரம்ப்



போர் நிறுத்த உடன்படிக்கைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால், ஈரானின் மின்விநியோக கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை கற்காலத்திற்கு அழைத்து செல்வோம் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் போர் ஐந்தாவது வாரத்தை எட்டியிருக்கும் நிலையில், போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்துவருவதாக டிரம்ப் தெரிவித்து வருகிறார். ஈரான் இதை தொடர்ந்து மறுத்துவரும் நிலையில், தற்போது போர் முடியும் தருவாயில் இருப்பதாக டிரம்ப் உறுதிபட கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களை சந்தித்த டிரம்ப், "அமெரிக்கா எந்த சுயலாபத்திற்காகவும் ஈரான் மீது தாக்குதல் நடத்தவில்லை. நட்பு நாடுகளுக்கு அச்சுறுத்தலாக ஈரான் இருப்பதால் தான் தாக்குதல் நடத்தினோம்" என்று நாட்டு மக்களிடம் உரையாற்றினார்.

அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும், அது நிறைவு பெறும் நிலையில் இருந்ததால் தான் ஈரான் மீது இஸ்ரேலுடன் இணைந்து தாக்குதல் நடத்தினோம் என்று டிரம்ப் நாட்டு மக்களை ஒருபுறம் சமாதானப்படுத்தி வருகிறார். எனினும், சொந்த நாட்டு மக்களின் வரிபணத்தில், இஸ்ரேலுக்கு உதவியாக அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருவதை அந்நாட்டு மக்களே விரும்பாமல் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதற்கு சான்றாக சமீபத்தில் 'அரசர் வேண்டாம்' என்ற தலைப்பில் லட்சக்கணக்கான அமெரிக்க மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

இந்த சூழலில், "ஈரானின் கடற்படை அழிக்கப்பட்டுவிட்டது. அவர்களின் முக்கியத் தலைவர்கள் இறந்துவிட்டனர். எனவே, இன்றிரவு போர் நிறுத்தம் தொடர்பான முக்கிய முடிவுகள் வரும் என எதிர்பார்க்கலாம்" என்று டிரம்ப் தனது உரையை மேலும் தொடர்ந்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "கடந்த 4 வாரங்களில், நமது ராணுவ வீரர்கள் போர்க்களத்தில் மிக பிரம்மாண்டமான வெற்றிகளைப் பெற்றுத் தந்துள்ளனர். இதுபோன்ற வெற்றிகளை இதற்கு முன் மிகச் சிலரே கண்டிருப்பார்கள்," என்று டிரம்ப் கூறினார்.

மேலும், அடுத்த 2 முதல் 3 வாரங்களுக்கு ஈரான் மீது அமெரிக்கா மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்தும் என்றும் டிரம்ப் தெரிவித்தார். "நமது இலக்குகள் எட்டப்படும் வரை நாங்கள் தொடர்ந்து தாக்குவோம்.

அடுத்த இரண்டு முதல் மூன்று வாரங்களில் ஈரான் மீது நாங்கள் கடுமையாகத் தாக்குதல் நடத்தவுள்ளோம்; அவர்களை நாங்கள் கற்காலத்திற்கே தள்ளிவிடுவோம். அங்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்துவிட்டது; அவர்களின் பழைய தலைவர்கள் அனைவரும் அகற்றப்பட்டுவிட்டனர்," என்றும் டிரம்ப் தனது உரையில் குறிப்பிட்டு பேசியுள்ளார்.

இஸ்ரேல், சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் உள்ளிட்ட கூட்டு நாடுகள் தங்களுக்கு உதவியாக இருந்தன என்றும் அவர்களுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் நன்றி தெரிவித்துள்ளார்.

## டிஜிட்டல் பேமென்ட்களுக்கு புதிய 2FA விதி: PIN மட்டும் போதாது!




நீங்கள் PhonePe, Google Pay, Paytm போன்ற செயலிகளைப் பயன்படுத்துவதற்கு புதிய விதிமுறை அமலுக்கு வந்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்காக புதிய விதிகளை அமல்படுத்தியுள்ளது. டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேலும் பாதுகாப்பானதாக மாற்றுவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி புதிய விதிகளைக் கொண்டுவந்துயுள்ளது. ரிசர்வ் வங்கியின் புதிய விதிகளின்படி, இனி உங்கள் PIN நம்பர் அல்லது கடவுச்சொல்லை உள்ளிட்டு மட்டும் உங்களால் பணம் செலுத்த முடியாது. பணம் செலுத்துவதற்கு, இப்போது நீங்கள் இரு காரணி அங்கீகாரம் ( 2FA ) என்ற நிபந்தனையை பூர்த்தி செய்ய வேண்டும்.

**இரு காரணி அங்கீகாரம் (2FA) என்றால் என்ன ?**

இணையவழி மோசடி மற்றும் டிஜிட்டல் மோசடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க இந்திய ரிசர்வ் வங்கி புதிய விதிமுறைகளை அமல்படுத்தியுள்ளது. புதிய விதிமுறைகளின் கீழ், பணம் செலுத்துவதை முடிக்க வெறுமனே PIN நம்பரை உள்ளிடுவது இனி போதுமானதாக இருக்காது. கடுமையான அங்கீகார விதிகளின்படி, இரண்டு தனித்தனி படிகளில் உங்கள் அடையாளத்தை நீங்கள் நிரூபிக்க வேண்டும். உங்கள் PIN நம்பருடன், நீங்கள் ஒரு முறை கடவுச்சொல் (OTP), பயோமெட்ரிக் சரிபார்ப்பு அல்லது சாதனம் சார்ந்த அங்கீகாரத்தை முடிக்க வேண்டும். அதாவது, பரிவர்த்தனைகளை முடிக்க பயனர்கள் இரட்டை அடுக்கு பாதுகாப்பைக் கடக்க வேண்டும்.

**ஆன்லைன் கட்டணம் எவ்வாறு செலுத்தப்படும் ?**

ஏப்ரல் 1 முதல், ஆன்லைன் கட்டணங்களுக்கு இரட்டைப் பாதுகாப்பு அடுக்கு தேவைப்படும்.

முதல் படியில், நீங்கள் முன்பே அமைக்கப்பட்ட PIN நம்பர் அல்லது கடவுச்சொல்லை உள்ளிட வேண்டும்.

இரண்டாவது அடுக்கில் OTP, கைரேகை அல்லது முக ஸ்கேன் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு புதிய அங்கீகாரச் செயல்முறையை நீங்கள் முடிக்க வேண்டும்.

கட்டணம் செலுத்த நீங்கள் பயன்படுத்தும் தொலைபேசியையும் அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

**வங்கிகள் பொறுப்பேற்க வேண்டும்!**

ரிசர்வ் வங்கியின் புதிய விதிகளில் உள்ள ஒரு முக்கிய மாற்றம் பொறுப்புடைமை ஆகும். வங்கிகளும் பணம் செலுத்தும் தளங்களும் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும். கணினி செயலிழப்பு காரணமாக மோசடி நடந்தால் வங்கிகள் பயனர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டியிருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் பயனர்கள் விரைவான தீர்வைப் பெறலாம். இது, நிதி நிறுவனங்கள் தங்கள் அமைப்புகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

**சர்வதேச பரிவர்த்தனைகள்!**

எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கும் இதேபோன்ற அங்கீகார விதிகள் பொருந்தும் என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. இந்த விதிகள் சர்வதேச அட்டை பேமெண்டுகளுக்கும் நீட்டிக்கப்படுகிறது. இதற்கான முழுமையான அமலாக்கம் அக்டோபர் மாதத்துக்குள் எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகளாவிய பரிவர்த்தனைகளுக்கு அதே அளவிலான பாதுகாப்பை உறுதி செய்யும் என்று கூறப்பட்டுள்ளது.

## தமிழக தேர்தல்: 7,600 வேட்புமனுக்கள் தாக்கல் கரூரில் அதிகபட்சம்!



தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நிறைவடைந்த நிலையில், மாநிலம் முழுவதும் மொத்தம் 7,600 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானோர் ஆண்கள், அதனைத் தொடர்ந்து பெண்கள் மற்றும் சில திருநங்கைகள் மனு தாக்கல் செய்துள்ளனர். முக்கிய அரசியல் தலைவர்களும் பல்வேறு தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 108 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. சென்னையில் 16 தொகுதிகளில் 628 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வேட்புமனுக்களின் பரிசீலனை நடைபெறவுள்ளது. மனு திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் ஏப்ரல் 9 ஆகும். அன்றே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

**PENA KURAL,** Tamil Monthly - March 2026 Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**
Administrative Office: 3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam, OMR, Chennai - 600097. Contact No.: 044 - 35906002, 87545 82123 Email: info@penakural.com

## பிடிஆர் - சுந்தர் சி மோதல்: குஷ்பு களமிறங்கி அரசியல் சர்ச்சை தீவிரம்





மதுரை அரசியல் களத்தில் நிதியமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் இயக்குநர் சுந்தர் சி இடையே ஏற்பட்ட வார்த்தைப் போர் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. சுந்தர் சிக்கு ஆதரவாக நடிகை குஷ்பு களமிறங்கி, பிடிஆர் தொடர்பான பழைய ஆடியோ மற்றும் திமுக அரசை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இந்த விவாதத்தில், கல்வித் தகுதியை மட்டும் வைத்து ஒருவரை மதிப்பிடக் கூடாது என்று சுந்தர் சி வலியுறுத்த, குஷ்பு 30,000 கோடி ஊழல் குறித்ததாக கூறப்படும் ஆடியோ விவகாரத்தை முன்வைத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் பதில் சொல்ல வேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், திமுகவில் மதிப்பில்லாத சூழல், குடும்ப அரசியல், கூட்டணி கட்சிகள் செயல்பாடு ஆகியவற்றையும் அவர் விமர்சித்துள்ளார்.

மொத்தத்தில், இந்த மோதல் தற்போது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## சிறுவனுக்கு விதித்த ஆயுள் தண்டனை ரத்து

மயிலாடுதுறையில் 2022ஆம் ஆண்டு வன்னியர் சங்க நகரத் தலைவர் கண்ணன் கொலை செய்யப்பட்ட வழக்கில், 17 வயதான இளஞ்சிறார் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு சிறார் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டிய நிலையில், நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் சேர்த்து விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அந்த சிறுவனை சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்குமாறு நாகப்பட்டினம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தாலும், அதற்கான வசதி இல்லாததால் அவர் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இதனை எதிர்த்து, சிறுவனை தவறாக அமர்வு நீதிமன்றத்தில் விசாரித்ததும், சாதாரண சிறையில் அடைத்ததும் சட்டவிரோதம் எனக் கூறி, அவரது தாய் சவிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் அனிதா சுமந்த் மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, சம்பவம் நடந்தபோது 18 வயதுக்கு உட்பட்ட சிறுவனின் வழக்கை மற்றவர்களுடன்



இணைத்து விசாரித்தது சிறார் நீதி சட்டத்திற்கு முரணானது எனக் கண்டறிந்தது. மேலும், தண்டனைக்கு பின் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்காமல் சாதாரண சிறையில் அடைத்ததும் தவறு என நீதிமன்றம் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து, சிறுவனை குற்றவாளி என அறிவித்து வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்த நீதிமன்றம், வழக்கை மயிலாடுதுறை சிறார் நீதிமன்றத்துக்கு மாற்றி, 6 மாதங்களுக்குள் மறுவிசாரணை நடத்தி முடிக்க உத்தரவிட்டது.

மேலும், 2023 ஜூன் மாதம் முதல் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த இளஞ்சிறாருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கியதுடன், சட்டவிரோதமாக சிறையில் வைத்திருந்ததற்காக ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## சபரிமலை வழக்கு: கோயில் மரபுகள் குறித்து

### மத்திய அரசின் வாதம்

சபரிமலை வழக்கில், பெண்கள் நுழைவு தொடர்பான விவகாரம் உச்ச நீதிமன்றத்தில் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வில் விசாரணையில் உள்ளது. பெண்கள் நுழைவுக்கு விதிக்கப்பட்ட தடையை மத்திய அரசு ஆதரித்து, அது பாலின பாகுபாடு அல்ல, மதச்சடங்கு மற்றும் நம்பிக்கையின் ஒரு பகுதி என வாதிட்டது.

சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, புஷ்கர் பிரம்மா கோவில், காமாக்யா ஆலயம் உள்ளிட்ட பல கோயில்களில் நிலவும் தனித்துவமான



மரபுகளை எடுத்துக்காட்டினார். சில இடங்களில் ஆண்களுக்கு, சில இடங்களில் பெண்களுக்கு மட்டுமே அனுமதி உள்ள நடைமுறைகள் இருப்பதை சுட்டிக்காட்டி, இவை அரசியலமைப்பின் மத சுதந்திர உரிமைகளுக்குள் வரும் என விளக்கினார்.

## அலிகர் பல்கலைக்கழக விடுதியில் சோதனை: ஆயுதங்கள், கள்ள நோட்டுகள் பறிமுதல்

உத்தரப்பிரதேசத்தின் அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் காவல்துறை நடத்திய சோதனையில் ஆயுதங்கள், தோட்டாக்கள், கள்ள நோட்டுகள் மற்றும் சந்தேக ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அண்மையில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தொடர்ந்து இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது பல்வேறு வகை தோட்டாக்கள் மற்றும் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன. சம்பவத்திற்கு முன் சந்தேக நபர்கள் தப்பி ஓடிய நிலையில், விடுதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களை தேடும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக வாகன நிறுத்தம் தொடர்பான தகராறு இருதரப்பு மோதலாக



மாறி, பின்னர் துப்பாக்கிச் சூடு சம்பவமாக உருவெடுத்தது. இதனைத் தொடர்ந்து ஃபைசல், அஷ்ரஃப், சாகிப் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முக்கிய குற்றவாளிகள் சிலர் மாணவர் விடுதி அறையை கைப்பற்றி அங்கிருந்தபடியே குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

**PROPSERV**
Property Related Allied & Legal services

- ★ REGISTRATION
- ★ PATTA
- ★ GIRAMA NATHAM
- ★ CMDA APPROVAL
- ★ BUILDING PLAN
- ★ NAME TRANSFER
- ★ SETTLEMENT
- ★ LEGAL HEIR CERTIFICATE
- ★ CORPORATION TAXES
- ★ LAND CEILING
- ★ SLUM BOARD
- ★ HOUSING BOARD
- ★ PROPERTY IDENTIFICATION
- ★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

## எவர் பிரைட் மழலையர் பள்ளி ஆண்டு விழா 2026




காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், குத்தனூர்-மாடம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள எவர் பிரைட் மழலையர் பள்ளியின் 23ஆம் ஆண்டு விழா கடந்த 28.03.2026 அன்று மாடம்பாக்கம் VSR மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மணிமங்கலம் காவல்துறை அதிகாரி திரு. G. சுந்தர், சன் நியூஸ் பத்திரிகையாளர் செல்வி அபிநயா சுப்பிரமணியம், கிருஷ்ணா கல்லூரி முதல்வர் டாக்டர் A. அன்புதாசன், Ln. டாக்டர் ஆறுமுகம் குருசாமி, பள்ளி தாளாளர் திரு. N. இளங்கோவன், சீனியர் அகாடமிக் அட்வைசர் திரு. ஜாய் ஜோசப் டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், மாடம்பாக்கம் திருவள்ளுவர் கலை இலக்கிய மன்ற தலைவர் திரு. E. திருநாவுக்கரசு, திரு. ஆரோக்கிய பிரிட்டோ, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் திரளாக பங்கேற்றனர்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த விருந்தினர்கள் கலந்து கொண்டது, இப்பள்ளியின் வளர்ச்சி மற்றும் கல்வி தரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது. மாணவர்கள் எதிர்காலத்தில் தங்கள் விருப்பத்துறையைத் தேர்வு செய்யும் வகையில், ஒவ்வொரு விருந்தினரும் பயனுள்ள கருத்துகளைப் பகிர்ந்தனர்.

இந்த ஆண்டு விழாவில் மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. திருக்குறள் நாடகம், நடனம், இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. மேலும், பள்ளியில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டினர்.

இப்பள்ளியின் நோக்கம் கல்வி மட்டுமல்லாமல், பொதுஅறிவு (General Knowledge), அணுகுமுறை (Attitude), திறன்கள் (Skills) ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து மாணவர்களை முழுமையான நற்பண்புகளுடன் உருவாக்குவதாகும். திறமையான ஆசிரியர்கள் வழிநடத்தும் இப்பள்ளி, ஏட்டுக் கல்வியுடன் இணைந்து செயல்முறை கல்வியிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வழிவகுக்கிறது.

இறுதியாக, பள்ளி நிர்வாகி திரு. முருகேசன் மற்றும் பள்ளி முதல்வர் திருமதி லயன் எம். கீதா முருகேசன் நன்றியுரை வழங்கினர். இதன் மூலம் விழா இனிதே நிறைவுற்றது.

குறிப்பு: பள்ளியில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. மேலும் தகவல்களுக்கு பள்ளியை தொடர்பு கொள்ளவும்.

செய்தியாளர்

எம். பாலசுப்பிரமணியன்




**தமிழினி பிரிண்ட்ஸ் & கிராஃபிக்ஸ்**
கடை எண்.12, AKT காம்ப்ளக்ஸ், பஜார் ரோடு, படப்பை - 601301. (மசூதி பக்கத்து பில்டிங்)
**8754582123**

PRINTOUT
- B/W & COLOR
- COLOR XEROX
- LAMINATION
- COLLEGE PROJECT
- SCANNING
- PHOTO PRINT
- SOFT BINDING
- SPIRAL BINDING
- PROJECT BINDING

ONLINE SERVICE
- AADHAAR CARD
- RATION CARD
- PAN CARD
- PASSPORT
- BIRTH & DEATH CERTIFICATE
- EPF CLAIM
- VOTER ID
- EC, PATTA, CITTA
- RENTAL AGREEMENT
- NOTARY PUBLIC
- DRIVING LICENCE
- COMMUNITY CERTIFICATE
- LEGAL HEIR
- INCOME CERTIFICATE

DTP
- TAMIL & ENGLISH TYPING
- VISITING CARD
- LETTERPAD
- WEDDING CARD
- PAMPHLET
- BROCHURE
- ID CARD
- RESUME / BIO DATA

ONLINE PAYMENTS
- EB BILL
- PROPERTY TAX
- WATER TAX

DESIGNING
- POSTER
- BANNER
- MAGAZINE
- NEWSPAPER

XEROX

WEBSITE DESIGN SERVICE

Owned, Printed and Published by: NV SIVASHANKAR | Printed at: J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. | Published at: No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. | Editor: RATHIKA S